பக்கங்கள் 12+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 30 செவ்வாய்க்கிழமை 16.12.2025 | அதிர்வு 139

பணிக்குச் சமூகமளிக்க முடியாத

## அரச அதிகாரிகளுக்கு விசேட விடுமுறைகள்



வெள்ளம், மண் சரிவு மற்றும் பாதைத் தடைகள் காரண மாக பணிக்குச் சமூ கமளிக்க முடியாத அரச அதிகா 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### சமஷ்டி தீர்வுக்கு அழுத்தம் கொடுக்க

# தமிழகம் விரைந்தது கஜேந்திரகுமார் குழு

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்டுவருவதற்கான அழுத்தங்களை இந்திய அரசு வழங்க வேண்டும். அதற்காகத் தமிழக அரசியல் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும்.” - என்று வலியுறுத்தி அவர்களுடன் பேச்சுக்களை நடத்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினர் இன்று தமிழகம் விரைந்துள்ளனர். 02

# இங்கு வெளிப்படைத்தன்மையுடனேயே கையாளப்படுகின்றன சர்வதேச உதவிகள்

### வெளிவிவகார அமைச்சர் விஜித் ஹேரத் விளக்கம்
### புலம்பெயர் இலங்கையர்களுக்கும் நன்றி தெரிவிப்பு



இலங்கைக்கு கிடைக்கப்பெறும் சர்வதேச உதவிகள் வெளிப்படைத்தன்மையுடனேயே கையாளப்பட்டு வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க நிர்வாகப் பொறிமுறை ஊடாக உரிய வகையில் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இலங்கைக்கு கிடைக்கப் பெறும் சர்வதேச உதவிகள் தொடர்பில் வெளிப்படைதன்மை இல்லை என முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டு தொடர்பில் வெளிவிவகார அமைச்சரிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையிலேயே 03

# புதிய காற்றுச் சுழற்சியால் வெள்ளி வரை மழை தொடரும்

“வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்காக புதிய காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இதன் காரண மாக வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, தெற்கு, வடமத்திய மாகாணங்களுக்கு மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் மிகக் கனமழையையும் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இம்மழை எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடரும் வாய்ப்புள்ளது.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

சமகால காலநிலை குறித்து ஊடகங்க ளிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்காக புதிய காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இது தற்போது உகந்தையில் இருந்து 408 கி.மீ. தென் கிழக்காக அமைவு பெற்றுள்ளது. அதே வேளை, இலங்கையின் தென் பகுதியை மையம் கொண்டு கீழ் வளிமண்டல தளம் பல் நிலை ஒன்றும் உருவாகியுள்ளது.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, தெற்கு, வடமத்திய மாகாணங்களுக்கு மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் மிகக் கனமழையையும் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இம்மழை எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடரும் வாய்ப்புள்ளது.

இந்த மழை நாளை புதன்கிழமை நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்குக்




கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு, ஊவா, மத்திய, வடமத் திய, சப்ரகமுவ மற்றும் மேற்கு மாகாணங் களின் பல பகுதிகளுக்கும் நாளை புதன் கிழமை கன மழை கிடைக்கும் வாய்ப் புள்ளது.

அதேவேளை, இன்று செவ்வாய்க் கிழமை முதல் வடக்கு, கிழக்கு, ஊவா, மற்றும் தென் மாகாணங்களின் கரையோ ரப் பகுதிகளுக்கு சற்று பலமான காற்று வீசும் வாய்ப்புள்ளது. குறிப்பாக மணிக்கு 30- 40 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் காற்றுச் சுழற்சி இலங்கைக்கு தென்கிழக்காக நிலவுவதாலும் இந்தக் காற்றுச் சுழற்சி மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என்பதனாலும் இலங் கையின் தென் பகுதியை மையம் கொண்டு கீழ் வளிமண்டல தளம்பல் நிலை நிலவுவதாலும் மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் சற்றுக் கனமழை பெறும் என எதிர்பார்க்கப்ப டுகின்றது.

இதன் காரணமாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, குரு நாகல் மாவட்டங்களின் சில பகுதிகளில் நிலச்சரிவு அனர்த்தங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆகவே, மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை கன மழை மற்றும் அதனோடு இணைந்த நிலச்சரிவு தொடர்பில் அவ தானமாகவும் எச்சரிக்கை உணர்வோடும் இருப்பது அவசியம்.

வடக்கு, கிழக்கு, மற்றும் வட மத்திய மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பல குளங்கள் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன. வான் பாயும் நிலையிலும் உள்ளன. இதனால் அடுத்து வரும் நாட்களில் கிடைக்கும் மழை இந்தக் குளங்களின் வான் பாயும் நீரின் அளவை அதிகரிக்க கூடும்.

அதேவேளை நாட்டின் பல இடங்க ளிலும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளதனால் மேலதிகமாக கிடைக் கும் 75 மி.மீ. மழை கூட சில தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தை உருவாக்கும் வாய்ப்புள்ளது. எனவே இது தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம்.

அதேவேளை இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு ஆழ் கடற் பகுதிகளுக்கு பலநாட் கலங்களில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்றுள் ளவர்கள் வேகமான காற்று மற்றும் அதிக உயரம் கொண்ட கடலலைகள் தொடர்பில் அவதானமாக இருப்பது சிறந்தது.” – என்றார்.

---

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிகளுக்கு விசேட விடுமுறை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செய லாளரால் இன்று அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர் களுக்கு இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விசேட விடுமுறையைப் பெற, பாதிக்கப்பட்ட அதிகாரிகள் தங்கள் நிறு வனத் தலைவரிடம் எழுத்துபூர்வ கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அதில் அவர்கள் சமூகமளிக்க முடியா தமைக்கான காரணத்தை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கோரிக்கையுடன் பிரதேச செயலாளரால் சான்றளிக்கப்பட்ட தொடர்புடைய கிராம அலுவலரின் பரிந்துரையும் இணைக்கப்பட வேண்டும்.

மேலும், நிறுவனத் தலைவர், பிரதேச செயலாளரால் சான்றளிக்கப்பட்ட கோரிக் கையை ஆய்வு செய்ய வேண்டும் என் றும், அதன் துல்லியத்தில் திருப்தி அடைந்தால் மட்டுமே, அதிகாரி பணிக்கு வர முடியாத நாட்களின் எண்ணிக்கைக் கான விசேட விடுப்புக்கான ஒப்புதலுக்காக துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சகம் இந்த விசேட விடுப்பு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளது.

## தமிழகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பயணம் தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசி யல் தீர்வாக இலங்கை அரசாங்கம் ஏக் கிய இராச்சிய அரசியல் யாப்பைத் திணிப் பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், அதனைத் தடுத்து தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்டுவருவதற்கான அழுத் தங்களைச் சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும்.

அந்தவகையில் பிராந்திய வல்லரசா கிய இந்திய அரசு இலங்கை மீது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான நிலையை ஏற்படுத்த தமிழக அரசியல் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது.

இந்த நோக்கத்துக்காகத் தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்து மேற்படி விடயங்களைத் தெளிவுபடுத்தி அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள் ளும் நோக்கில் சென்னை சென்று அரசியல் தலைவர்களுடன் இந்த வாரம் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளோம்.” – என்றார்.

தமிழகம் விரைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தலைமையி லான குழுவில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த.சுரேஷ், ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், பிரசாரச் செயலாளர் சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோருடன் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

# முன்னாள் அமைச்சர் ரத்நாயக்கவுக்குப் பிணை



பண மோசடிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்கவைக் கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ்.போதரகம இன்று பிணையில் விடுவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு, ரூ. 57.3 மில்லியனுக்கும் அதிகமான சட்டவிரோத வருமானம் ஈட்டியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ரத்நாயக்கவைக் கைது செய்திருந்தது.

இலஞ்ச சட்டத்தின் பிரிவு 23(ஏ)(1) இன் கீழ் இலஞ்ச ஆணைக்குழுவின் சொத்து விசாரணைப் பிரிவால் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சி.பி. ரத்நாயக்க தலா ரூ. 2 மில்லியன் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கும் வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டது.

# சுனாமி தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் குருதிக்கொடை

(நூருல் ஹுதா உமர்)

“சுனாமி” ஏற்பட்டு 21 ஆண்டு நிறைவை முன்னிட்டு சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், மையோன் சமூக சேவை அமைப்பு, மையோன் குரூப், மற்றும் யுனைடெட் பவர் ஹவுஸ் ஆகியவற்றின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் அதிகம் கலந்து கொண்டு இரத்தத்தை தானம் செய்து இவ் உயிர் காக்கும் உன்னத பணியில் பங்கு கொள்ளுமாறும் “ஓர் உயிரை வாழ வைத்தவர் எல்லா உயிர்களையும் வாழ வைத்தவர் போல் ஆவார்” என்னும் ஹதீஸிற்கிணங்க சகலருக்கும் குருதிக்கொடை வழங்க சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இரத்ததானம் வழங்க விரும்புவோர் அஸ்வர் (0774804316), நஸீர் (077 6968676), ஜெமீன் (077900 0771) ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# வட்டகொடை யொக்ஸ்போர்ட் பாடசாலை அச்சத்தில் தற்காலிகமாக மூடப்பட்டது!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மண்சரிவு அபாயம் காரணமாக, தலவாக்கலை வட்டகொட யொக்ஸ்போர்ட் தமிழ் வித்தியாலயத்தின் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் தற்காலிகமாக வேறொரு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு மேலுள்ள மலையின் மண்சரிவு ஏற்பட்டதையடுத்து பாடசாலை கட்டடங்களில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனையடுத்து பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளை தற்காலிகமாக அருகிலுள்ள வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு மாற்றியுள்ளனர்.

யொக்ஸ்போர்ட் தமிழ் வித்தியாலயம் ஒரு ஆரம்ப பாடசாலையாகும்.இங்கு கல்வி கற்கும் 49 மாணவர்களும் கல்வி கற்பிக்கும் ஆறு ஆசிரியர்களும் தற்போது வட்டகொட தமிழ் மகா வித்தியாலயத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இதனால் யொக்ஸ்போர்ட் பாடசாலையில் கல்வி கற்கும் இளம் மாணவர்கள் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் நடந்து பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.





இது குறித்து நுவரெலியா கல்வி வலயத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.கணேஸ்ராஜிடம் கேட்டபோது,

பாடசாலை மைதானத்திலும் பாடசாலைக்கு மேலே உள்ள மலையிலும் மண்சரிவு அச்சுறுத்தல் இருப்பதால், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை வட்டகொட தமிழ் மகா வித்தியாலயத்தில் இணைத்து கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்காலிகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும், இது தொடர்பாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பாடசாலையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“பேரிடரின் பின்னர் இலங்கைக்கு சர்வதேச உதவிகள் கிடைக்க ஆரம்பித்தன. முதல் ஆறு மணி நேரத்துக்குள்ளேயே மீட்புப் பணிக்குரிய உதவியை இந்தியா வழங்கியது.

பாகிஸ்தான், சீனா, நேபாளம் உட்பட அனைத்து நாடுகளும் உதவி வருகின்றன. இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்கள் தமது பிரத்தியே நிதியைக்கூட வழங்கியுள்ளனர்.

தம்மால் முடிந்த வகையில் எமக்கு உதவி வழங்கிய சர்வதேச சமூகத்துக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நெருக்கடினான நேரத்தில் நேசக்கரம் நீட்டிவரும் புலம்பெயர் இலங்கையர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.” -என்றும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நிவாரணப் பணியில் ஓரிரு குறைபாடுகள் இருக்கலாம். அதனை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த கட்டமைப்பு மீது விமர்சனங்களை முன்வைப்பத ஏற்புடையது அல்ல.

விநியோகப் பொறிமுறை நீதியாக நடக்கின்றது. வெளிப்படையான அரசாங்க நிர்வாகப் பொறிமுறை உள்ளது.” – என்றும் வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறினார்.

# மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுங்கள்!

## இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் கமால்தீன் தெரிவிப்பு

(அபு அலா)

கொழும்பிலிருந்து பதுளைக்கும் அதேபோன்று மட்டக்களப்புக்கும், திருகோணமலைக்கும் அமையப்பெற்றுள்ள ரயில் போக்குவரத்து சேவையில், ஒரு அங்குலம் கூட இற்றைவரை விஸ்தரிக்கப்படவில்லை. இதனை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பி.கமால்தீன் தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக முன்னணியின் ஊடக மாநாடு நேற்று அட்டாளைச்சேனை பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற தோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானியரின் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ரயில் போக்குவரத்து சேவையை விஸ்தரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. கடந்த 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளித் தாக்கத்தின் பின்னரோ அல்லது 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தின் பின்னரோ இந்த ரயில் விஸ்தரிப்புச் சேவையை வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கலாம். ஆனால், கடந்த அரசுகள் அந்தச் சந்தர்ப்பங்களை நழுவ



விட்டன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இரண்டு அனர்த்தங்களைவிட படுமோசமான அனர்த்தம் கடந்த வாரம் டித்வா புயலால் ஏற்பட்டது. இந்தப் பாதிப்புக்களை அவதானித்த வெளிநாட்டு அரசுகளும், நிதி நிறுவனங்களும் அனுதாபக் கண்ணோடு பல உதவிகளை இன்றும் செய்து வருகின்றன.

குறிப்பாக எமது நாட்டில் தற்போது ஏற்பட்ட அனர்த்தால் ரயில் பாதைகள் சீரழிந்துள்ளன. இவற்றைச் சீர்செய்வதற்காக வெளிநாட்டு உதவியை நாடுகின்ற போது, பிரித்தானியர் ஆட்சியில் அமையப்பெற்ற ரயில் சேவை இடைநிறுத்தப்பட்ட நிலையங்களில் இருந்து அதாவது, கொழும்பிலிருந்து – பதுளை வரையிலும், மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவையை மொனராகலை வரையிலும், கொழும்பிலிருந்து – மட்டக்களப்பு வரையிலும் மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவையை பொத்துவில் வரையிலும், கொழும்பிலிருந்து – திருகோணமலை வரையிலும் மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவையை புல்மோட்டை வரையிலும் விஸ்தரிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இலங்கை ஜனநாயக முன்னணி எமது ஜனாதிபதியையும் தேசிய மக்கள் அரசையும் வினயமாக வேண்டிக் கொள்கின்றது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற முதுமொழிக்கேற்ப குறித்த ரயில் பாதைகளை விஸ்தரிப்பதற்கான முன்னெடுப்புக்களை இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்க முடியும்.

மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவை விஸ்தரிக்கப்பட்டால் இந்த நாட்டு மக்களுடைய ஒட்டு மொத்தமான ஆதரவும் எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்துக்குக் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.– என்றார்.



# இலங்கை அரச பொது சேவைகள் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார் மூதூர் பிரதேச செயலாளர்

(அபு அலா)

மூதூர் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு கடமையேற்றுள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரி பிர்னாஸ் இஸ்மாயிலுக்கு இலங்கை அரசா பொது சேவைகள் சங்கம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

புதிய பிரதேச செயலாளரை வாழ்த்தி வரவேற்கும் முகமாக மூதூர் பிரதேச செயலகத்துக்கு நேரடியாகச் சென்ற இலங்கை அரச பொது சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.சிபான் தலைமையிலான தொழிற்சங்க உறுப்பினர்களால் பிரதேச செயலாளர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது, புதிய பிரதேச செயலாளருக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட தொழிற்சங்க பொது செயலாளர் ஏ சிபான், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாகச் சேதமடைந்த மூதூர் பிரதேசத்தை அவசரமாக மீளக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் குறித்துக் கலந்துரையாடினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இல்லாத மேடையில் நடிப்பு

''இல்லாத மேடையிலே எழுதாத நாடகத்தை எல்லோரும் நடிக்கின்றோம் - நாம் எல்லோரும் பார்க்கின்றோம்'' என்பது கவிஞர் கண்ணதாசன் 'அபூர்வ ராகங்கள்' திரைப்படத்தில் எழுதிய புகழ்பெற்ற 'கேள்வியின் நாயகனே...' என்ற திரைப்படப் பாடலின் ஒரு வரியாகும்.

தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திப்பதற்கு என்ற பெயரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியப் பேரவை ஆகியவற்றின் தலைவர்கள் இன்று தமிழகம் புறப்பட்டுள்ள நிலையில் அது பற்றி அவர்கள் தரப்பில் விடுத்த அறிவிப்பை பார்க்கும் போது இந்தப் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

நாய்க்கு கல்லெறிந்தால் கல் எங்கு பட்டாலும் நாய் காலை தூக்கிக் கொண்டுதான் ஓடும் என்பார்கள். அப்படித்தான் சைக்கிள் கட்சி அணியினரும், இன்றைய நிலையில் அரசியலுக்கு எதை எடுத்தாலும் தமிழரசு கட்சியின் சுமந்திரனோடு முட்டுப் படுவதைத்தான் தங்களின் ஒரே கொள்கைக் கோட்பாடாகவைத் திருக்கிறார்கள். அவர்களுக்கு 'சுமந்திரன் போபியா' வருத்தமிருப்ப தாகவும் பலரும் பேசிக் கொள்வது உண்டு.

இப்போதும் கூட தாங்கள் தமிழ்நாட்டுக்கு செல்வதற்கு 'சிறிலங்கா அரசு ஏக்கிய ராஜ்ய அரசியல் யாப்பை திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளது' என்று தெரிவித்துத்தான் இந்த வேலையை அவர்கள் செய்ய முற்பட்டிருக்கிறார்கள்.

'ஏக்கிய ராஜ்ய' என்று அவர்கள் தவறான அர்த்தப்படுத்தலோடு தமிழ் மக்களை பிழையாக வழிநடத்தி எடுத்துரைக்கும் தீர்வு யோசனை நல்லாட்சி அரசின் காலத்தில் சுமந்திரன் - சம்பந்தன் இணையின் முயற்சியினால் முன்னெடுக்கப்பட்டது. அது ஒன்று மட்டும் கருதியே அதை தவறாக அர்த்தப்படுத்தி, குழப்பி அடிக்க சைக்கிள் கட்சியினர் எப்போதும் தீவிரமாக இருப்பார்கள். அந்த அரசமைப்பு நகல் சுமந்திரனின் பங்களிப்போடும் முன்வைக்கப்பட்டது என்பதால் அது தமிழ் மக்களுக்கு கிடைக்க விடக்கூடாது என்பது 'சுமந்திரன் போபியா' மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் சைக்கிள் கம்பனியின் ஒரே நிலைப்பாடு. அரசியல் போக்கிடமற்ற ஐங்கரநேசனும் அதில் இணைந்து கொண்டிருக்கின்றார். அவ்வளவுதான்.

இப்போது ஏக்கிய ராஜ்ய என்று சைக்கிள் அணி தவறாக அர்த்தப்படுத்தும் தீர்வு திட்டத்தைத் தன்னும் திணிக்கும் நடவடிக்கை எதையும் இந்த அரசு ஆரம்பிக்கவே இல்லை. அதற்கான எண்ணம் எதுவும் இந்த அரசுக்கு இருப்பதாகவும் இல்லை.

அப்படி இருக்கையில், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஒரு கதை விட்டுக் கொண்டு, அதன் பெயரில் தமிழக அரசியல் விஜயம் என்று சைக்கிள் அணி புறப்பட்டிருப்பது இல்லாத மேடையில் எழுதாத நாடகத்தை நடிக்கும் கதைதான்.

தமிழக சட்டசபை தேர்தல் நெருங்கும் சமயத்தில் தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிகள், தாங்கள் கூட்டணி அமைப்பது தொடர்பான அங்கலாய்ப்பிலும் இழுபறியிலும் தீவிரமாக உள்ளனர். இந்தச் சமயத்தில் தங்களைத் தமிழ்த் தேசிய கொள்கைப் பற்றில் தீவிர போக்குடையவர்கள் என்று நடிப்புக் காட்டும் சைக்கிள் அணியை தமிழகத்தின் எந்த மூத்த தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் என்பது பார்த்திருக்கத்தக்க முக்கிய விடயம்தான்.

நெடுமாறன், திருமாவளவன், சீமான், வீரமணி போன்றவர்களை விடுங்கள். அதற்கு அப்பால் எந்தத் தரப்பினர் பேச்சு நடத்துகிறார்கள் என்பது அறிய சுவாரசியமாகத்தான் இருக்கும்.





# முள்ளியவளை கொமர்ஷல் வங்கியால் குளிர்சாதனப் பெட்டி கையளிப்பு நிகழ்வு

கொமர்ஷல் வங்கி முள்ளியவளை கிளையானது 310 லீற்றர் கொள்ளவுடைய குளிர்சாதனப் பெட்டியை ஒட்டுசுட்டான் பசும்பொன் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கையளிக்கும் நிகழ்வு பசும பொன் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது கொமர்ஷல் வங்கி முள்ளியவளை கிளை முகாமையாளர் செ.தினேசன் தலைமையில் இடப்பெற்றது. குறித்த நிகழ்வுக்குக் கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் அ. ஜெயபாலன் பிரதம விருத்தினராக கலந்து சிறப்பித்தார்.





குறித்த நிகழ்வுக்குப் பசும்பொன் கூட்டுறவுச்சங்க தலைவர் மு. இராசலிங்கம், பொது முகாமையாளர் திருமதி. சி. பிறேமலதா மற்றும் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வு குறித்து கிளைமுகாமையாளர் கருத்து தெரிவிக்கையில், கொமர்ஷல் வங்கியானது கிராமம் தோறும் இயங்கும் சங்கங்களின் உற்பத்திதிறன் மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக இவ்வாறான சமூகப்பொறுப்பு நிகழ்வுகளை இலங்கை முழுவதும் செய்துவருவதாக கூறினார்.

மேலும் நிகழ்வின் இறுதியில் கடந்த அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்ட சங்க உறுப்பினர்களுக்குக் கொமர்ஷல் வங்கியின் சமூகப்பொறுப்பு நிதியத்தால் உலர்உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.







### மண்சரிவு அபாயத்தால்

# ஸ்பிரிங்வெளி வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது!

( நடராஜா மலர்வேந்தன் )

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தின் ஸ்பிரிங்வெளி பிரதேசத்தில் அமைந்துள்ள அரச வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று ஊவா மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலை மூடப்பட்டதை அடுத்து, ஸ்பிரிங்வெளி தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட சுற்றுவட்டாரக் கிராமங்களான ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள், மருத்துவ சேவைகளின்மையால் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவித்ததாவது,

வைத்தியசாலைக்கு அருகிலுள்ள நமுனுகுல மலையில் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் புவியியலாளர் குழு நடத்திய ஆய்வில் தெரியவந்தது.

இந்த தகவலின் அடிப்படையில் பொது மக்களின் பாதுகாப்பு கருதி வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிகிச்சை தேவையுள்ள நோயாளர்களுக்கான அசௌகரியங்களை குறைப்பதற்காக ஸ்பிரிங் வெளி பகுதியில் உள்ள அபயபுர சனசமூக மண்டபத்தில் வெளிநோயாளர் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.



# இளைஞர்களிடையே ஏற்பட்டு வரும் பண்பாட்டு மாற்றங்கள்

■ **நிலானி.**

இன்றைய தொழில்நுட்ப உலகில் சமூக மாற்றங்களை முதலில் பிரதிபலித்துக் காட்டுவதாக இளைஞர்களின் வாழ்க்கை போக்கு உள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக ஊடகங்கள் உலகமய மாக்கல், கல்வி விரிவாக்கம், வேலை வாய்ப்புப் போட்டி என அனைத்தும் இணைந்து இன்று இளைஞர்களிடையே மிகப்பெரிய பண்பாட்டு மாற்றத்தை உருவாக்கியுள்ளன.

இந்த மாற்றங்கள் சில நேரங்களில் முன்னேற்றமா கவும் சில நேரங்களில் தீங்குகளை ஏற்படுத்தும் நிலையாகவும் மாறிவிடுகின்றன.

இன்றைய டிஜிட்டல் உலகில் ஸ்மார்ட் போன், இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் இளைஞர் யுவதி களின் வாழ்க்கையை முற்றிலும் மாற்றியமைத்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள கலாச்சாரங்கள் அது தொடர்பான விடயங்கள் மொழி நடத்தை உடைப் பாவனை உள்ளிட்டவைகள் உடனுக்குடன் ஊடகங்கள் வாயிலாக பகிரப்படுவதானது, ஒரு வகையில் புதிய வாழ்க்கைக்கு உள்ளீர்க்க செய்தாலும் மற்றொரு வகை தீங்கையும் உள்வாங்க செய்கின்றது. நடத்தை எனும் போது இன்று டிக்டொக் வாயிலாக புள்ளிங்கோ அதிகரித்து வருவதை கூறலாம்.

பழைய தலைமுறைகளுடன் ஒப்பிடுகையில் இன் றைய இளைஞர்களின் வாழ்க்கை முறை ஒரு வேகமான போட்டியாளரான சூழலில் வாழ்கின்றார்கள். இங்கு இவர்களுக்கான நேரம் குறைவாகவும் எதிர்பார்ப்புகள் அதிகமாகவும் காணப்படுவதால் குடும்பத்துடன் செலவிடும் நேரம் குறைகின்றது. இதனால் பாரம்பரிய பழக்கவழக்கங்களில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் குறைந்து விடுகின்றது.

அவ்வாறே பிற கலாச்சாரங்களை ஏற்றுக் கொள்வது தவறான விடயம் அல்ல. அவற்றிற்கான ஊக்குவிப்பையும் பெற்று தரும் அதே வேலை சொந்த கலாச்சாரத்துக்கான அங்கீகாரத்தையும் மதித்து மறவாது வாழப்பழக வேண்டும். ஏனெனில் இன்று உணவு ஆளை மொழி மரபு அனைத்திலும் ஆழ்ந்த வெளிநாட்டு தாக்கத்தையே காண முடிகின்றது.

பண்பாடு மாற்றம் என்பது முழுவதும் எதிர்மறை அல்ல ஆயினும் இதனை முழுவதுமாக ஏற்றுக் கொள் ளும் பட்சத்தில் மொழி அடையாளம் மங்குதல், நுகர் வோர் பண்பாடு உருவாதல், சமூக உறவு குறைதல், மனநல பிரச்சனைகள் ஏற்படல், மற்றும் பாரம்பரிய கலை மரபுகள் குறைந்து போதல் என தீய தாக்கங்கள் ஏற்படக்கூடும். இதனால் பண்பாட்டு மாற்றத்தின் மையத்தில் நிற்கும் இளைஞர்கள் புதிய உலகத்தை ஏற்றுக் கொள்வதோடு பழமையான மரபுகளின் தகவல்களை பாதுகாக்கவும் அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்லவும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.





# நாயாறு படகு சேவை தொடர்பில் பொது மக்களுக்கு அறிவிப்பு!

(பா.சதீசன்)

நாயாறு படகு சேவைக்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்றும் எனினும், முகத்துவார பகுதியில் அதிக அலை அல்லது அதிக நீரோட்டம் ஏற்பட்டால், படகு சேவையில் தாமதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நீர்மட்டம், அலைகள் மற்றும் பாது காப்பு நிலையைக் கடற்படை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. பாதுகாப்பான சூழ்நிலை உறுதி செய்யப்பட்டால் மட்டுமே படகு சேவை இயக்கப்படும்.

அவசரமாக செல்ல வேண்டியவர்கள், மற்றும் குறிப்பாக மோட்டார் சைக்கிள் பயன்படுத்துவோர் நெடுங்கேணி வழியை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். பொதுமக்கள் தயவு செய்து அமைதியாகக் காத்திருக்கவும். நிலைமை சீராகும் பட்சத்தில், நாயாறு வழியாக படகு சேவை வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# டித்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களது பிரச்சினை பற்றி ஆராய்வு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் டித்வா புயலால் ஏற்பட்ட அனர்த்த சூழ் நிலைகளின் காரணமாக மீனவ சமூகம் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சி னைகள் குறித்து ஆராய்ந்து, அவற் றைத் தீர்க்க எடுக்க வேண்டிய நடவ டிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசா அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமாரவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல், நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமனவின் தலைமையில் நடைபெற் றது. இக்கூட்டத்தில் துறைசார் அரச நிறுவனங்களின் அதிகாரிகள், மீன் பிடித் திணைக்களக அதிகாரிகள், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனர்த்தம் காரணமாகச் சேத மடைந்த படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு இழப்பீடு வழங்கும் செயல்முறையை விரைவு படுத்துதல்,கொட்பே மீன்பிடித் துறை முகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க பாதுகாப்பை அதிகரித்தல், தடைசெய் யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்க ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக் மேலும் வலுப்படுத்துதல், கொட்பே மீன்பிடித் துறைமுகத்தை விரிவுபடுத்தல் போன்ற பல விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.



# பேரிடரால் பாதிக்கப்பட்ட ஒரு நபரேனும் நிவாரணம் வழங்கலில் விடுபடக்கூடாது!

## குழுக்களை அமைத்துக் கண்காணித்து வருகின்றோம் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இராசரட்ணம் விஜயகுமார் தெரிவிப்பு

(பா.சதீசன்)

பேரிடரால் பாதிக்கப்பட்ட ஒரு நபரேனும் நிவாரணம் வழங்கல் விடயத்தில் விடுபட கூடாது என்ற ரீதியில் சரியான முறையில் கிராம சேவையாளர் பிரிவுகளில் குழுக்களை அமைத்து திறந்த விசாரணை இடம்பெற்று தீர்வு வழங்குகின்றோம். மக்கள் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரும் கரைதுறைப்பற்றுப் பிரதேச பதில் பிரதேச செயலாளருமான இராசரட்ணம் விஜயகுமார் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக கரைதுறைப் பற்று கிராம சேவையாளர் பிரிவுகள் தொடர்பாக வருகின்ற மக்களின் முறைப்பாடுகள், பேரிடர் நிவாரணம் தொடர்பாக எழுந்துள்ள விமர்சனங்களுக்குத் தெளிவு வழங்கும் முகமாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்பொழுது இருக்கும் சுற்று நிருபத்தின் பிரகாரம் மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு, திறைசேரியின் தெளிவான சுற்று நிருபங்கள் காணப்படுகின்றது. இருந்தாலும் அறியாமை ரீதியில் ஏற்படும் பிரச்சினையாகவே நான் பார்க்கின்றேன்.

குறிப்பாக முள்ளியவளை வடக்கு, புதறிகுடா, மணவாளசிங்கன், கள்ளப்பாடு வடக்கு, தெற்கு போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த அடிப்படையில் இவற்றை ஆய்வு செய்வதற்காக விஷேடமாக இரு குழுக்களும், அதே போன்று திறந்த வெளிவிசாரணை நடத்துவதற்காக உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் செயற்படுகின்றன. அதனடிப்படையில் ஒவ்வொரு




விடயங்களையும் ஆராயும் போது மக்கள் குறிப்பாக எதிர்பார்ப்பது தங்களுடைய வீட்டு வளவுக்குள் நீர் வந்தால் அந்த கொடுப்பனவு வழங்க வேண்டும் என் பதுதான்.

உண்மையில் வீட்டுக்குள் தண்ணீர் வந்தால் அதனை சுத்தப்படுத்தி குடியமர்வதற்காக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஏனைய சேதங்கள் ஏற்பட்டால் மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் கொடுப்பனவுகளை கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையில் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு அதன் பிரகாரமே நடைபெற்று வருகின்றது.

இருந்தாலும் சில நாள்களாக ஏற்பட்டிருக்கும் சர்ச்சைக்கு உரிய நிலவரங்களுக்கு உரிய காரணங்கள் வெளி வளவுக்குள் நீர்வந்தமை, புகைக்கூடு, சமையல் அறையில் நீர் வடிந்தமை, தூவானம் அடித்த காரணத்தால் தமக்கு நிவாரணம் தரவேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்திருக்கின்றன.

குறித்த காலப் பகுதியில் தொலைத் தொடர்பு இல்லாதால் சரியான முறையில் தொடர்பாடல் இருக்கவில்லை, சில கிராமங்களில் கிராம அலுவலகர்கள் சில வீடுகளுக்கு சென்று பார்க்கவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கின்றது.

கரைதுறைப்பற்று பிரதேசத்தை எடுத்துப் பார்த்தால் சிறப்பாக வேலைசெய்யும் பல கிராம சேவகர்களும் உள்ளனர். அதேநேரம் குறித்த காலப்பகுதியில் சரியான முறையில் வேலைசெய்யாத இரு உத்தியோகத்தர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுத்து மாற்றி பதில் உத்தியோகத்தரை நியமித்து நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

ஆகவே தற்போது எழுந்திருக்கும் குற்றச்சாட்டு பல உத்தியோகத்தர்களைப் பாதித்திருக்கின்றது. முள்ளியவளை வடக்கு தொடர்பாக விஷேட குழுவினரை கொண்டு ஆராய்ந்த போது, அங்கு தனிநபர்களுக்கும் கிராம அலுலருக்கும் நீதிமன்ற வழக்குவரை முறைப்பாடு இருக்கும் காரணத்தால் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பாதிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தனிப்பட்ட விரோதம் காரணமாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. எங்களுக்கு மக்கள் அனைவரும் சமம். ஆகவே அவர்கள் செய்வது தவறு என நாம் சுட்டிக்காட்ட விரும்பவில்லை.

எதிர்காலத்தில் ஏதாவது கிராமசேவகர் பிரிவில் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் நிச்சயமாக கிராம அலுவலகரால் தீர்வு வழங்க முடியாவிட்டால் பிரதேச செயலகத்தை நாடுங்கள். பிரதேச செயலகத்தால் தீர்வு வழங்க முடியாவிட்டால் நீங்கள் மாவட்ட செயலகத்தை நாடமுடியும்.

நாம் பல குழுக்களை அமைத்து அனைத்து இடங்களிலும் திறந்த விசாரணை நடத்தித் தீர்வை வழங்குகின்றோம். பாதிக்கப்பட்ட ஒரு நபரேனும் விடுபட கூடாது. அதே நேரம் பாதிக்கப்படாத ஒருவருக்கும் கொடுப்பனவை கொடுக்க கூடாது என்ற ரீதியில் சரியான முறையில் கண்காணித்து வருகின்றோம்.

முல்லைத்தீவில் எந்த பிரச்சினையும் இன்றி நடைபெறுகின்றது. எனினும் தற்பொழுது ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக விசாரணை செய்து வருகின்றோம். எனவே உண்மை நிலையை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தோம்.எனவே மக்கள் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார்.

---

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசரம்!

பசுமை தழுவும் பூமி அழுகையில்,
மனம் சிதறும் நம் விழிகள் காணும்,
காற்று மாறும், நதி ஓடும், மரங்கள் விழும்,
இது நாம் செய்ய வேண்டிய அவசரம்!

கண்ணீர் போல மண் கடலுக்கு செல்வது,
குளிர் நீங்கி வெப்பம் கூடும் உலகம்,
சிறு முயற்சியோடு தொடங்கி நிற்கவேண்டும்,
பசுமையை காத்தல் நம் கடமை!

குப்பை இடத்தில் மலர்ந்த பூவோ இல்லை,
சுவாசம் செய்யும் காற்றும் மாசடித்தது,
நம் குழந்தைகளின் எதிர்காலம் நம்பிக்கை,
இன்று நம் செயல்தான் தீர்மானம்!

வெளிப்படையாக எங்கும் புகுந்து வந்துள்ள,
சுற்றுச்சூழல் அழிவு தடுக்க ஒத்துழைவு,
பசுமை சுவாசம் தரும் பூமி வாழ்வோம்,
இது நம் வாழ்வின் முதற்கட்டப் பயணம்!



**நடராசா கோபிராம்,**
உளவியல்சிறப்புக்கலைமாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.





# முல்லைத்தீவு பகுதிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிவாரணம்

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, தேராவில், இளங்கோபுரம், மாணிக்கபுரம் கிராமங்களில் உள்ள 63 குடும்பங்களுக்கு, 2 லட்சத்து 52 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இவ் உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள், அவரது தொண்டர்களுடன் நேரடியாகக் கலந்து கொண்டார்.





### வடக்கு வர்த்தக, கைத்தொழில் சம்மேளன இணையத்துக்கு

# வர்த்தக சங்கங்களில் இருந்து பிரதிநிதிகளைப் பரிந்துரைக்குக!

### ஆளுநரின் செயலாளர் கோரிக்கை

வடக்கு மாகாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்களின் இணையத்தை உருவாக்குவதற்கு பதிவு செய்யப்பட்ட வர்த்தக சம்மேளனங்களிடம் இருந்து பிரதிநிதிகளைப் பரிந்துரைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் கடந்த நவம்பர் 14 மற்றும் டிசெம்பர் 4 ஆம் திகதிகளில் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டங்களைத் தொடர்ந்து, 'வடக்கு மாகாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்களின் இணையத்தை' உருவாக்குவதற்கு ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக, பதிவு செய்யப்பட்ட வர்த்தக சம்மேளனங்களிடம் இருந்து பிரதிநிதிகளின் பரிந்துரைகளைக் கோரி வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுநரின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

புதிதாக உருவாக்கப்படவுள்ள இந்த இணையமானது, எமது மாகாணத்தின் வர்த்தக சமூகத்தின் கூட்டு நலன்களை மேம்படுத்துவதற்கும், வர்த்தக சம்மேளனங்களுக்கும் மாகாண நிர்வாகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்குமான ஒரு ஒருங்கிணைந்த தளமாகச் செயற்படும்.

இந்த இணையத்தை உத்தியோகபூர்வமாக நிறுவுவதன் அடுத்த கட்டமாக, அதன் ஆரம்பகால நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதன்போது பின்வரும் நான்கு முக்கிய பதவிகளுக்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர், ஜனநாயக முறைப்படியான வாக்கெடுப்பு மூலம் இந்தப் பதவிகளுக்கானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில், கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக சம்மேளனங்கள் ஒவ்வொன்றும், தேர்தல் செயல்முறையில் பங்கேற்பதற்காகத் தமது சம்மேளனத்தைச் சேர்ந்த இருவரை பிரதிநிதிகளாகப் பரிந்துரைக்குமாறு கோரப்படுகின்றார்கள். பரிந்துரைக்கப்படும் பிரதிநிதிகள் அந்தந்தச் சம்மேளனத்தின் நன்மதிப்புள்ள உறுப்பினர்களாக இருப்பது அவசியமாகும்.

எனவே, பரிந்துரைக்கப்படும் பிரதிநிதிகளின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களை, சம்மேளனத்தின் அதிகாரபூர்வ அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு, எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக ஆளுநர் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வடக்கு மாகாண வர்த்தக சமூகம் ஒரே குரலில் ஒலிப்பதற்கும், பொதுவான சவால்களைக் கூட்டாக எதிர்கொள்வதற்கும் இந்த இணையத்தின் உருவாக்கம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும். எனவே, அனைத்து சம்மேளனங்களும் இதில் முனைப்புடன் பங்குகொண்டு தகுதியான பிரதிநிதிகளைப் பரிந்துரைக்குமாறு ஆளுநரின் செயலாளர் கேட்டுக்கொள்ளார்.

# ஒரு வாக்கைக் கூட தவறவிடக் கூடாது: தி.மு.கவினருக்கு ஸ்டாலின் கண்டிப்பு



எஸ்.ஐ.ஆர். மூலம் தமிழகத்தில் ஒரு வாக்கு கூட தவறிவிடாத வகையில் கண்காணித்து செயலாற்ற வேண்டும் என தி.மு.க. வழக்கறிஞர் அணிக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆருக்கு தி.மு.கவும் அதன் கூட்டணி கட்சிகளும் ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. ஆனாலும் எஸ்.ஐ.ஆர். பணியில் தி.மு.கவினர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். இதற்காக பாகம் வாரியாக தி.மு.கவைச் சேர்ந்த பி.எல்.ஏக்கள் எஸ்.ஐ.ஆர். படிவங்களை விநியோகித்து, அதனை மீண்டும் பெற்று பி.எல்.ஓவசம் ஒப்படைக்கும் பணியில் தீவிரம் காட்டினர்.

தற்போது, தமிழகத்தில் 99.27 சதவீதம் எஸ்.ஐ.ஆர். படிவங்கள் பெறப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு விட்டதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், தி.மு.க. தலைவர் ஸ்டாலின், மாநிலம் முழுவதும் வாக்காளர்களால் படிவங்கள் பெறப்படாத மற்றும் பி.எல்.ஓவிடம் திரும்ப ஒப்படைக்காத படிவங்களை கண்காணித்து, ஒரு ஓட்டு கூட தவறவிடாமல் 100 சதவீதம் இணையத்தில் பதிவேற்ற தேவையான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என தி.மு.க. வழக்கறிஞர் அணிக்கு உத்தரவிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இது தொடர்பாக அண்மையில், தி.மு.க. சட்டத்துறை செயலாளரும் எம்.பியுமான என்.ஆர். இளங்கோ அறிவாலயத்தில் தி.மு.க. வழக்கறிஞர் அணி கூட்டத்தை கூட்டி, எஸ்.ஐ.ஆர் பணியை 100 சதவீதம் பூர்த்தி செய்திட தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சிலர், “பா.ஜ.க. அரசு, எஸ்.ஐ.ஆர். மூலம் தமிழகத்தில் லட்சக் கணக்கில் ஓட்டுகளை நீக்கி, திராவிடக் கட்சிகள் கள்ள ஓட்டு மூலமே வெற்றிபெற்று வருவது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த நினைக்கிறது.

இதை முறியடிக்கும் விதமாக திமுக வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு, சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்தில், எஸ்.ஐ.ஆர். பணிகளை செம்மையாக முடிப்பது குறித்து விரிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

எஸ்.ஐ.ஆர். பணிகள் முடிவுற்றாலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான தும் புதிதாக வாக்காளர்கள் சேர்க்கை பணி நடக்கும். அப்போது, விடுபட்டவர்களை கண்டறிந்து அவர்களை சந்தித்து, தொகுதி மாறியிருந்தால் அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கும் படி வழக்கறிஞர் அணி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆக, எக்காரணம் கொண்டும் ஒரு வாக்கைக் கூட தவறவிடக் கூடாது என்பதே தலைவர் ஸ்டாலினின் கண்டிப்பான உத்தரவு. இந்தப் பணிகளை தொகுதி பொறுப்பாளர்களின் கீழ் வழக்கறிஞர் அணியை சேர்ந்த 5 பேர் கொண்ட குழு செம்மையாக செய்து முடிக்கும் வகையில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.” - என்றனர்.

# மாட்டு வண்டியில் வந்து தேர்தல் பொங்கலை கொண்டாடுவதற்கு தயாராகிறார் பழனிசாமி

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி முதல்வராக இருந்த போது, சொந்த ஊரில் பொங்கல் பண்டிகை கொண்டாடி வந்தார். பின்னர், ஒவ்வொரு ஆண்டும் சேலம் மாவட்டத்தின் ஒரு தொகுதியை தேர்ந்தெடுத்து மக்களுடன் பொங்கல் பண்டிகை கொண்டாடி வருகிறார்.

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒரு மாதம் மட்டுமே உள்ள நிலையில், மேட்டூர் தொகுதியில் கிராம மக்களுடன் பண்டிகையை கொண்டாட உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இன்னும் சில மாதங்களில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பழனிசாமி கலந்து கொள்ளும் பொங்கல் விழாவை முக்கியத்துவம் பெறும் வகையில் கொண்டாட சேலம் மாவட்ட அ.தி.மு.க.வினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

அதன்படி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி மேட்டூர் தொகுதியில் பொங்கல் பண்டிகையை கொண்டாடும் வகையில் கொளத்தூர், மேச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன் தலைமையிலான மேட்டூர் தொகுதி நிர்வாகிகள் கிராமத்தை தேர்வு செய்யும் பணியில் நேற்று ஈடுபட்டனர்.



தொடர்ந்து, கோனூர் பகுதியில் உள்ள மாரியம்மன் கோயில் திடலில் பிரமாண்டமாக 108 பானைகளில் பொங்கல் வைத்து கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

பழனிசாமியை மாட்டு வண்டியில் ஊர்வலமாக அழைத்து வரவும், கலை நிகழ்ச்சிகள், ஒயிலாட்டம், பொம்மலாட்டம் உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனவும் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கொளத்தூரில் தொகுதி நிர்வாகிகளுடன் நடந்த ஆலோசனை கூட்டத்தில் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வேண்டும் எனவும் நிர்வாகிகளுக்கு சில அறிவுரைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. மேட்டூர் தொகுதி நிர்வாகிகள் அதற்கான ஏற்பாடுகளை உடனடியாக தொடங்கி உள்ளனர்.






# பிரேசிலில் பலத்த காற்றில் சரிந்து விழுந்த நூற்றாணடு கால சுதந்திர தேவி சிலை

பிரேசிலின், குவைபாவில் வீசிய பலத்த காற்று காரணமாக சுதந்திர தேவி சிலை சரிந்து விழுந்துள்ளது. இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரேசிலின் ரியோ கிராண்டே டோ சுல் மாநிலத்தில் புயல் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசில் நேரப்படி பிற்பகல் 3 மணியளவில் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய கடுமையான காற்று மற்றும் புயல் காரணமாக குவைபா நகரில் உள்ள 'ஹவன்' சில்லறை விற்பனைக் கடையின் முன் அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய சுதந்திர தேவி சிலை திடீரென சரிந்து விழுந்தது.

சிலை சரிந்த விழுந்த சம்பவம், உள்ளூர் விவாதப் பொருளாகவும் மாறியுள்ளது. இந்த சுதந்திர தேவி 1900களின் முற்பகுதியில் நிறுவப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிலர் சிலை இடிந்து விழுந்த காட்சியைக் காணொலியாக பதிவு செய்து சமூக ஊடகங்களில் பதிவேற்றியுள்ளதுடன் அவை தற்போது வைரலாகி வருகிறது.

# சிட்னியில் தாக்குதல்தாரியை தடுத்த நபருக்கு நன்கொடை





சிட்னியின் பொண்டாய் கடற்கரையில் நடந்த துப்பாக்கிச்சூட்டின் போது, தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவரிடமிருந்து துப்பாக்கியைப் பறித்த நபருக்காக அவுஸ்திரேலியா முழுவதிலும் இருந்து நன்கொடைகள் குவிந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் மொத்தத் தொகை தற்போது 1.1 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை (744,000 அமெரிக்க டொலர்கள்) தாண்டியுள்ளது.

துப்பாக்கிக் காயம் காரணமாக அறுவை சிகிச்சை செய்துகொண்டு மருத்துவமனையில் அவர் குணமடைந்து வரும் நிலையில், இந்த நன்கொடை அதிகரித்துள்ளது.

இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான 43 வயதான அஹ்மத் அல் அஹ்மத், நிறுத்தப்பட்டிருந்த சிற்றூந்துகளுக்கு பின்னால் பதுங்கி இருந்து, துப்பாக்கிதாரிகளில் ஒருவரைப் பின்புறமாகத் தாக்கிப் பாய்ந்தார்.

தாக்குதல் நடத்தியவரின் துப்பாக்கியைப் பறித்து, அவரைத் தரையில் தள்ளிய அஹ்மத்தின் செயல், மேலும் உயிரிழப்புகளைத் தடுத்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய பொலிஸ் திங்களன்று வெளியிட்ட அறிக்கையில், இந்தத் தாக்குதலை 50 வயதுடைய தந்தையும் அவரது 24 வயது மகனும் ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்த யூத கொண்டாட்டத்தின் போது நிகழ்த்தினர் என தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த மூன்று தசாப்தங்களில் நாட்டில் நடந்த மிக மோசமான துப்பாக்கிச்சூடு இது என்று அதிகாரிகள் விவரித்துள்ளனர்.

இதற்கிடையில், அஹ்மத்துக்கு ஆதரவாக அமைக்கப்பட்ட 'GoFundMe' பிரசாரம், ஒரே நாளில் 1.1 மில்லியன் அவுஸ்திரேலிய டொலருக்கும் அதிகமாக நிதி திரட்டியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சிட்னியில் யூதர்கள் நிகழ்வில் துப்பாக்கிச்சூடு நடத்தியவரிடமிருந்து துப்பாக்கியை பிடுங்கிய போது குண்டடிப்பட்ட அகமத்-அல்-அகமதுவை மருத்துவமனையில் சந்தித்து அந்நாட்டு பிரதமர் அந்தோணி அல்பனீஸ் பாராட்டியுள்ளார்.

மேலும் பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தனது எக்ஸ் தளத்தில்,

“அகமது, நீங்கள் தான் அவுஸ்திரேலியாவின் ஹீரோ. போண்டி கடற்கரையில், மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் பெரும் ஆபத்தை கையாண்டீர்கள்.

இப்படிப்பட்ட மிகவும் இக்கட்டான நேரங்களில் தான், அவுஸ்திரேலிய மக்களின் சிறந்த குணங்களை நாம் காண முடிகிறது. ஒவ்வொரு அவுஸ்திரேலியர் சார்பாகவும், நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்” என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், அந்தோணி அல்பனீஸ் செய்தியாளர்களிடம் பேசும்போது,

“நமது நாடு துணிச்சலான நாடு. அகமது நமது நாட்டின் சிறந்த பண்புகளைப் பிரதிபலித்துள்ளார். இந்த நாடு பிளவுபடுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஆனால் பயங்கரவாதிகள் அதைத்தான் விரும்புகிறார்கள். நாம் ஒன்றுபடுவோம், ஒருவரையொருவர் அரவணைப்போம், இதிலிருந்து மீண்டு வருவோம்.” என்றார்.

பக்கங்கள் - 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 16/12/2025

கனடாவில் நவம்பர் மாதத்தில் வீட்டு விற்பனையில் வீழ்ச்சி



C3▶




# மலையகத் தமிழரின் பாதுகாப்பு உடன் கவனிக்கப்பட வேண்டும்!

## கனடியத் தமிழர் பேரவை வலியுறுத்து இலங்கை நிலைமை குறித்து அறிக்கை

பாதுகாப்பற்ற நிலங்களுக்கு மக்களை மீண்டும் அனுப்புவது தீர்வல்ல. மனித நேயமும் நீடித்ததுமான பாதுகாப்பை மையமாகக் கொண்ட அணுகுமுறை உடனடியா-கத் தேவைப்படுகிறது. அடுத்த பேரழிவுக்குப் பிறகு அல்ல, இப்போதே மலையக தமிழ்ச் சமூகங்களில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு கனடிய தமிழர் பேரவை அற்க்கை ஒன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

C2▶

# கனேடிய குடியுரிமை தொடர்பில் நிறைவேற்றியுள்ள புதிய சட்டம்




வெளிநாடுகளில் பிறந்த கனேடியர்கள், தங்கள் பிள்ளைகளும் வெளிநாட்டில் பிறக்கும் பட்சத்தில், அவர்களுடைய கனேடிய குடியுரிமை அவர்களுடைய பிள்ளைகளைச் சென்றடையாது என்னும் நிலை மாறியுள்ளது.

வெளிநாடுகளில் பிறந்த கனேடியர்கள், தங்கள் பிள்ளைகளும் வெளிநாட்டில் பிறக்கும் பட்சத்தில், அவர்களுடைய கனேடிய குடியுரிமை அவர்களுடைய பிள்ளைகளைச் சென்றடையாது என்னும் நிலை கனடாவில் இருந்தது.

இந்த விதியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், ‘Lost Canadians’ என்றே அழைக்கப்படுகிறார்கள். 2009இல் அறிமுகமான இந்த விடயம், வெளிந-ாடுகளில் பிறந்த கனேடியர்கள், தங்கள் பிள்ளைகளும் வெளிநாட்டில் பிறக்கும் பட்சத்தில் அவர்கள் கனேடிய குடிமக்களாக அங்கீகரிக்கப்படுவதற்கு தடையாக இருந்தது.

2023 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், ஒன்றாறியோ உச்சநீதிமன்றம், இந்த சட்டம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று கூறி அதை முடிவுக்குக் கொண்டுவந்தது.

கனடா அரசும், இந்த சட்டத்தின் விளைவுகள் ஏற்றுக்கொள்ளப்படத் தக்க இயலாதவைதான் என ஒப்புக் கொண்டு ஒன்றாறியோ உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை.

C2▶

# கனடா சரேயில் துப்பாக்கிச் சூடு; வர்த்தக நிறுவனத்தில் பரபரப்பு







கனடா சரேயில் உள்ள வர்த்தக நிறுவனத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கி பிரயோக சம்பவம் குறித்து கனேடிய காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சரேயில் உள்ள 120 ஆவது வீதியில் உள்ள நிறுவனத்திலிருந்து அதிகாலை 2.30 மணியளவில் கிடைத்த தகவலையடுத்து, காவல்துறையினர் அங்கு சென்றதாக 'வன்குவர் சண்' செய்தித்தாள் விபரித்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்ற போது, பணியாளர்கள் வர்த்தக நிலையத்திலிருந்த போதிலும் எவருக்கும் காயமேற்படவில்லை.

அச்சுறுத்தி பணம் பெறும் நோக்கில், இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என காவல்துறை அதிகாரி லின்சே ஹவ்டன் தெரிவித்துள்ளார்.

## மலையகத் தமிழரின்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் மலையகப் பகுதிகளில் டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட கடும் பாதிப்புகள் குறித்து கனடியத் தமிழர் பேரவை ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது. பல உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், ஏற்கனவே ஆபத்தான சரிவுப் பகுதிகளில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் – முக்கியமாகத் தமிழ்மொழி பேசும் தோட்டத் தொழிலாளர் சமூகங்கள் – தங்களின் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப் பேரழிவு தனிப்பட்ட ஒன்றல்ல. பல தசாப்தங்களாக மலையகத் தமிழ்ச் சமூகங்கள் இலங்கையில் பொருளாதார ரீதியாகவும், இயற்கை அனர்த்தங்களுக்கு அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற சமூகங்களாகவும் இருந்து வருகின்றன. மீண்டும் மீண்டும் ஏற்படும் வெள்ளம், நிலச்சரிவு போன்ற அனர்த்தங்கள், நீண்டகால பாதுகாப்பு இல்லாத, பாதுகாப்பற்ற நிலங்களில் குடும்பங்கள் வசிக்க வேண்டிய கட்டாய நிலையை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு அனர்த்தத்திற்குப் பிறகும் அதே ஆபத்தான நிலங்களுக்கு மீண்டும் மக்களைத் திருப்பி அனுப்புவது, அவர்களின் உயிர்களைத் தொடர்ந்தும் ஆபத்தில் ஆழ்த்துகிறது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மலையக சமூகங்களுக்காக பாதுகாப்பை முதன்மையாகக் கொண்ட, உரிமை சார்ந்த நீண்டகால இடமாற்றுத் திட்டத்தை உடனடியாக ஏற்குமாறு இலங்கை அரசையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது. அந்தத் திட்டம் பின்வரும் அடிப்படை கோட்பாடுகளை உட்படுத்த வேண்டும்:

• மலையகப் பகுதிகளுக்குள் பாதுகாப்பான நிலங்களுக்கு இடமாற்றம்:–

சாத்தியமான இடங்களில், அதே மாவட்டங்களுக்குள், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட நிலங்களில் குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். வீடமைப்பு, வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

• வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விருப்ப அடிப்படையிலான இடமாற்றம்:–

மலையகப் பகுதிகளில் பாதுகாப்பான நிலம் கிடைக்காத சந்தர்ப்பங்களில், முழுமையான சம்மதத்துடன் இடமாற்றம் விரும்பும் தமிழ்மொழி பேசும் குடும்பங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலம் வழங்கும் விருப்பத் திட்டத்தை கனடிய தமிழர் பேரவை ஆதரிக்கிறது. அங்கு நிலவும் தமிழ்ச் சமூகச் சூழல், தமிழ் வழிக் கல்வி மற்றும் பண்பாட்டு தொடர்ச்சி குடும்பங்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் உறுதி செய்யும்.

எந்தவொரு இடமாற்றமும் முழுமையாக விருப்ப அடிப்படையிலும், தகவல் அறிந்த சம்மதத்துடனும், கட்டாயமற்ற முறையிலும் நடைபெற வேண்டும். நில உரிமை பாதுகாப்பு, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார ஆதரவு உறுதி செய்யப்பட வேண்டும்.

மலையகத் தமிழ்ச் சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இலங்கையின் குடிமக்கள் அமைப்புகள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களுடன் இணைந்து செயல்பட கனடிய தமிழர் பேரவை தயாராக உள்ளது. மலையகப் பகுதிகளில் மீண்டும் மீண்டும் நிகழும் உயிரிழப்புகளும் வீட்டு இழப்புகளும் ஒன்றை தெளிவு படுத்துகின்றன. பாதுகாப்பற்ற நிலங்களுக்கு மக்களை மீண்டும் அனுப்புவது தீர்வல்ல. மனித நேயமும் நீடித்ததுமான பாதுகாப்பை மையமாகக் கொண்ட அணுகுமுறை உடனடியாகத் தேவைப்படுகிறது. அடுத்த பேரழிவுக்குப் பிறகு அல்ல, இப்போதே மலையக தமிழ்ச் சமூகங்களில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். – என்று உள்ளது.

## கனேடிய குடியுரிமை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், Bill C-3 என அழைக்கப்படும், 2025ஆம் ஆண்டுக்கான கனேடிய குடியுரிமைச் சட்ட மசோதாவுக்கு, மன்னர் சார்லஸ், சமீபத்தில் ஒப்புதலளித்தார்.

அதைத் தொடர்ந்து, நேற்று, அதாவது, 2025ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 15ஆம் திகதி, 'குடியுரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்' என்னும் அந்த மசோதா, சட்டமாக மாறியுள்ளது.

இந்த சட்டம் நிறைவேறியுள்ளதைத் தொடர்ந்து, வெளிநாட்டில் பிறந்த கனேடிய குடிமக்களுக்கு வெளிநாட்டில் பிறந்த அல்லது அவர்கள் வெளிநாட்டில் இருக்கும்போது தத்தெடுத்த பிள்ளைகளுக்கும் கனேடிய குடியுரிமை கிடைக்கும் என்பதால், ஆயிரக்கணக்கான மக்கள் தற்போது கனேடிய குடியுரிமை பெறத் தகுதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் நவம்பர் மாதத்தில் வீட்டு விற்பனையில் வீழ்ச்சி

கனடா முழுவதும் வீட்டு விற்பனை நவம்பர் மாதத்தில் கடந்த ஆண்டின் அதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 10.7 வீதம் குறைந்துள்ளது என கனடிய வீட்டு மனை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

2026-ஐ நோக்கி நகரும் நிலையில், வீட்டு சந்தை தற்போது காத்திருப்பு நிலையில் இருப்பதாகவும் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நவம்பரில் நாடு முழுவதும் 33,895 வீடுகள் விற்பனையாகியுள்ளன எனவும் பருவகால சரிசெய்த கணக்கீட்டில், அக்டோபருடன் ஒப்பிடுகையில் விற்பனை 0.6 வீதம் குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நவம்பரில் விற்கப்பட்ட வீடுகளின் தேசிய சராசரி விலை 682,219 டொலர்களாக பதிவாகி, ஆண்டு அடிப்படையில் 2 வீத சரிவைக் காட்டியுள்ளது.

2025 முடிவிற்கு முன் ஒப்பந்தங்களை முடிக்க சில விற்பனையாளர்கள் விலை தளர்வுகளை வழங்கி வருகின்றனர்” என கனடிய வீட்டுமனை ஒன்றியத்தின் மூத்த பொருளாதார நிபுணர் சோன் கெட்ச்கார்ட் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எதிர்வரும் ஆண்டில் வீட்டு விற்பனை அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# சுற்றுச்சூழல் பாதுகாப்பு தீவிரம்: கனடா நிறுவனங்களுக்கு வாய்ப்பு

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஒத்துழைப்பைத்தீவிரப்படுத்த கனடாவும், ஐரோப்பிய ஒன்றியமும் முறையான ‘பசுமை கூட்டணியினை’ ஸ்தாபித்துள்ளன.

இதன் மூலம் காலநிலை நடவடிக்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஒத்துழைப்பு தொடர்பான விடயங்கள் மேம்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் கனடாவுடனான தொடர்பும் செயல்படும்.

இதன் மூலம் கனேடிய நிறுவனங்கள் காலநிலை மாற்றம் போன்ற பகிரப்பட்ட சவால்களில் இணைந்து ஆராய்ச்சியினை மேற்கொள்ள அனுமதியினை பெற முடியும்.